**ஏறாவூர்பற்று பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏறாவூர்பற்று பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறாவூர்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 3,809,453 சம்பள மீளளிப்புத் தொகை நிதிக் கூற்றில் பெற வேண்டியதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டு சீர்செய்யப்படும். | பெறவேண்டியவைகள் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடகை மற்றும் குத்தகை தொடர்பில் அறவிட வேண்டிய நிலுவை பதிவேட்டின் படி ரூபா 3,737,404 ஆன போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 8,634,121 எனக் காட்டப்பட்டுள்ளது. | கடந்த ஆண்டுகளின் பதிவேடுகள் பரிசீலிக்கப்பட்டு வழுக்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 358,414,232 பெறுமதியான சொத்து விடயங்களுடன் தொடர்புடைய காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, பெறுமதியை உறுதிப்படுத்தும் | காணி கட்டடங்க க்கான பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கான பதிவுகள் விரைவாக மேற்கொள்ளப்படும் ஏனையவற்றுக்கான பதிவுகள் | சொத்துக்களுக்கான எழுத்துமூலச் சான்றுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஆவணங்கள் மற்றும் உரிமையை நடைமுறையில் உள்ளது. உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்வி ற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 | முற்பணமாக செலுத்திய ரூபா 6,370,413 தொகை இரண்டு வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகி ன்றது. | எதிர்காலத்தி ல் இதனை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் . | முற்பணங்களை உரியவர்களிடமிரு ந்து அறவிட நட வடிக்கை எடுக்க ப்பட வேண்டும். |
| இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1) மற்றும் (2) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 1,717,008 வைப்புக்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் மிகைத்த வருமானம் ரூபா 83,880,400 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் மிகைத்த வருமானம் ரூபா 44,622,683 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரையான ரூபா 8,634,121 வாடகை மற்றும் குத்தகை நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புப் பணம் மற்றும் கழிவுப்பணம் கழித்த தொகை தற்சமயம் அறவிடப்பட்டு வருகின்றது. | குத்தகை நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஒரு படமாளிகையிலில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 992,081 களியாட்ட வரி பல வருடங்களாக அறவிடப்படாமல் நிலுவையாக காட்டப்பட்டு வருவதுடன், அப்பட மாளிகை தொடர்ந்தும் இயங்குகின்ற நிலையில் கடந்த 03 ஆண்டுகளுக்கான களியாட்ட வரிக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அறவிடுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதம செயலாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 49,310,700 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 15,555,000 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | தற்சமயம் சகல முத்திரை தீர்வைகளும் பரீசிலனை செய்யப்பட்டு பெறவேண்டிய அனைத்து தீர்வைகளும் சீர்செய்யப்படும். | தண்டப்பணம் மற்றும் தீர்வைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்று பயன்படுத்தப்பட்டு வருகின்ற 09 வாகனங்கள் சபையின் பெயருக்கு சொத்தாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்படாத வாகனங்களை வெகுவிரைவில் உரிமை மாற்றம் செய்வதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. | சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் பின்னர் கடந்த 03 வருடங்களின் போது நூலக புத்தக கணக்கெடுப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட ஆண்டுகளுக்கான நூலக புத்தக கணக்கெடுப்பை நடாத்துவதற்கு உரிய நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. | பொருட் கணக்கெடுப்பை உரிய காலப்பகுதியில் நிறைவேற்ற வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நல்லிணக்கம் சார் பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2018/19) இன் கீழ் ரூபா 20 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட செங்கலடி சந்தை தொகுதி கட்டடமானது கணக்காய்வு திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக் கவில்லை. | வடிகால் வசதிகள் செய்யப் பட்டதுடன் மீன் சந்தை வியாபாரிகளுக்கு மீன் விற்பனை செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்ப ட்டுள்ளது. | சந்தைக் கட்டடத்தை உரிய நோக்கத்தி ற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக் கப்படல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கரடியனாறு எனுமிடத்தில் JICA கடன் உதவித் திட்டத்தின் மூலம் சுமார் 400 கிராமிய குடும்பங்களுக்கு குடி தண்ணீர் விநியோகிப்பதற்காக ரூபா 40 மில்லியன் செலவில் 2015 ஆண்டு நிர்மாணிக்கப் பட்ட குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு சபையினால் 2016 தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 4.59 மில்லியன் செலவிடப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வுத் திகதி வரை பொதுமக்களுக்கு நீர் வழங்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. | கரடியனாறு குடிநீர் வினியோகத் திட்ட வேலைகள் தொடர்பான சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் எதுவும் எமது சபையிடம் கையளிக்கப்படவில்லை. | உரிய நோக்கத் திற்காக பயன்ப டுத்த நடவடி க்கை எடுக்கப் படல் வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையில் வெற்றிடமாகக் காணப்படும் 11 பதவிகளுக்கான 19 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | ஆளணி தொடர்பாக சபையினால் கவனம் செலுத்தப்பட்டு நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங் களை நிரப்புவ தற்கு அல்லது ஊழியர் கோப்பை திருத் துவதற்கு நடவடி க்கை எடுக்க ப்பட வேண்டும். |
| (ஆ) | ஓய்வு பெற்ற, வேலையிலிருந்து நீங்கிய மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 03 ஊழியர்களிட மிருந்து அறவிட வேண்டிய ரூபா 117,131 கடன் தொகையை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையா ளியிடமிருந்து அறவிடுவதற்காக சபை 05 வருடமாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு பல தடவைகள் எழுத்துமூலம் கடிதம் உரிய நபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட காத்திர மான நடவடிக் கைகள் எடுக் கப்பட வேண் டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | எமது சபைக்கு உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு கணக் காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உள்ளகக் கணக்கா ய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடி க்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான சுட்டிகளை அடிப்படையாக வைத்து அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வ தற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலைபேறான அபிவிரு த்தி குறிகாட்டிகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும். |